2015 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 186, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

186—

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி

***52861—திரு. கே.பி.பி. பாஸ்கர்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரித்து, நாமக்கல் மாவட்டத்தில் புதிய மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியானது, சேலம் மாவட்டத்தில் உள்ள 1,252 இணைப்புச் சங்கங்கள் மற்றும் நாமக்கல் மாவட்டத்திலே உள்ள 706 இணைப்புச் சங்கங்கள் மூலமாக, இரு மாவட்ட மக்களின் பயிர்க் கடன் உள்ளிட்ட இதர வங்கிச் சேவைகளைச் சிறப்புடன் செய்து வருகிறது. பொதுவாக, ஒரு மத்தியக் கூட்டுறவு வங்கியைப் புதிதாகத் தொடங்க வேண்டுமென்றாலோ அல்லது ஏற்கெனவே உள்ள வங்கியை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்றாலோ, அதற்கு நபார்டு வங்கியின் பரிந்துரையின்பேரில், ரிசர்வ் வங்கியின் உரிமை அவசியம். ஆனால், தற்போதைய நிலையில், ஏற்கெனவே உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகளைப் பிரிப்பதற்கு, நபார்டு வங்கி பரிந்துரை செய்வதில்லை என்ற நிலைப்பாட்டில் உள்ளது. மேலும், தற்போது நல்ல நிலையில் இயங்கிவரும் மத்தியக் கூட்டுறவு வங்கியை இரண்டு வங்கிகளாகப் பிரித்து, நாமக்கல் மாவட்டத்திற்கென்று தனியாக ஒரு மத்தியக் கூட்டுறவு வங்கியைத் தொடங்கும்போது, அதற்கான மூலதனச் செலவுகள், நிருவாகச் செலவுகள் போன்ற இதர செலவுகள் அதிகரித்து, தாய் வங்கியான

சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கியின் நிதிநிலை பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், புதிதாக உருவாக்கப்படும் வங்கியும் நலிவடையும் நிலை ஏற்படும். எனவே, நாமக்கல் மாவட்டத்திற்கென்று தனியாக ஒரு மத்தியக் கூட்டுறவு வங்கியை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.*

முற்பகல் 10—35

திரு. கே.பி.பி. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். சேலம் மாவட்டத்திலிருந்து நாமக்கல் மாவட்டத்தைப் பிரித்து, 15 ஆண்டுகள் ஆகின்றன. நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கியில் சுமார் 24 கிளைகள் உள்ளன. அதுமட்டுமல்லாமல், 168 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களும் கடனுதவி செய்துவருகின்றன. மேலும், 20 பணியாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 3 வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும், ஒரு நகரக் கூட்டுறவுச் சங்கமும், 120 கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களும், 52 விசைத்தறியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும் உள்ளன. இந்தச் சங்கங்களின் மூலமாகக் கடன் வசதி செய்து தரப்படுகிறது. மேலும், புதிய கடன் வழங்கவும், நிருவாக வசதிக்காகவும், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரித்து, நாமக்கல் மாவட்டத்திற்கு புதிய மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அன்போடு கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் மாவட்டத்திற்கு ஒரு புதிய மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி வேண்டுமென்று வலியுறுத்துகிறார். குறிப்பாக, இன்றைக்கு நம்முடைய கூட்டுறவுக் கடன் சங்கங்களைச் சீரமைக்க*

2015 செப்டம்பர் 1]

உருவாக்கப்பட்டிருக்கின்ற திரு. வைத்தியநாதன் தலைமையிலான குழு தனது அறிக்கையில், இந்தக் கடன் சங்கங்களையும், கூட்டுறவு வங்கிகளையும் இணைக்கத்தான் முடியுமேதவிர, பிரிக்கக்கூடாது என்று தெரிவித்திருக்கிறது.

இன்னொன்று, தற்போது எடுக்கப்பட்டிருக்கின்ற ஒரு நிலைப்பாடு என்னவென்றால், நபார்டு வங்கியின் அனுமதி வேண்டும்; ரிசர்வ் வங்கியின் உரிமை பெற்றிருக்க வேண்டும்; அப்போதுதான் ஒரு மாவட்ட வங்கி முழுமையாக அதனுடைய செயல்பாடுகளைச் செய்ய முடியும். இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில், மத்திய ரிசர்வ் வங்கியும், நபார்டு வங்கியும் மாவட்ட வங்கிகளைப் பிரிக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபிறகு, நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கின்ற மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் அனைத்திலும், குறிப்பாக, தலைமைக் கூட்டுறவு வங்கி, மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்டங்களில் இருக்கின்ற 23 மாவட்டக் கூட்டுறவு வங்கிகள், அதன் 794 கிளைகள், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அத்தனை கிளைகளும் கணினிமயமாக்கப்பட்டு—Core Banking Solutions—க்குக் கொண்டு வந்து—மைய வங்கிகள் தீர்வு முறை செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தியாவிற்கே முன்னோடியாக, வழிகாட்டியாக தாய்த் திருநாடாம் தமிழ்நாட்டில்தான், தாயினுடைய ஆட்சியில்தான் இந்த அற்புதமான திட்டம் செயல்படுத்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்தக் காலகட்டத்தில், வங்கிச் சேவை என்பதில், மாவட்ட வங்கியானது அந்த மாவட்டத்திலிருந்துதான் வங்கிச் சேவை ஆற்ற வேண்டும் என்ற சூழ்நிலை இன்றைக்கு இல்லை. ஒரு மாவட்டத்திலிருந்து வேறு எந்த மாவட்டத்திற்கும் வங்கிச் சேவை ஆற்ற முடியும். அந்த அளவிற்கு இன்றைக்குத் தொழில்நுட்ப வசதி முன்னேறியிருக்கிறது. அந்த வகையில், இந்த வங்கிகளைப் பிரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

இரண்டாவதாக, ஏற்கெனவே நாமக்கல் மாவட்டத்தில் 24 மாவட்டக் கூட்டுறவு வங்கிக் கிளைகள் இருக்கின்றன. 24 கிளைகளில் 20 கிளைகள் நஷ்டத்தில் இயங்கி வருகின்றன. 4 கிளைகள் மட்டுமே இலாபத்தில் இயங்கி வருகின்றன. இன்னும் கூடுதலாகத் தகவல் சொல்ல வேண்டுமென்றால், அந்த மாவட்ட

மக்களுக்குப் பயிர்க் கடன் கொடுப்பதிலோ, இதர கடன்கள் கொடுப்பத்திலோ எந்தவிதமான தேக்க நிலையும் இல்லை.

இன்னும் கூடுதலாக மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், இந்திய அளவில் 640 மாவட்டங்கள் இருக்கின்றன. ஆனால், 372 மாவட்டக் கூட்டுறவு வங்கிகள்தான் இருக்கின்றன. நம்முடைய அண்டை மாநிலமான கர்நாடகத்தில் 30 மாவட்டங்கள் இருக்கின்றன. ஆனால், 21 மாவட்டக் கூட்டுறவு வங்கிகள்தான் இருக்கின்றன. ஒடிசா மாநிலத்தில் 30 மாவட்டங்கள் இருக்கின்றன. ஆனால், 17 மாவட்டக் கூட்டுறவு வங்கிகள்தான் இருக்கின்றன. இப்படி நாம் சொல்லிக்கொண்டே போகலாம். இந்தியாவைப் பொறுத்தவரையில், இத்தகைய சூழ்நிலை தமிழ்நாட்டில் மட்டுமல்ல; அனைத்து மாநிலங்களிலும் இதே சூழ்நிலைதான் கடைப்பிடிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள் அவருடைய பகுதிக்கு ஒரு கூட்டுறவு வங்கிக் கிளை வேண்டும் என்று வேண்டுமானால் கேட்கலாம். அங்கு வங்கிக் கிளை அமைக்கலாம்; அல்லது வங்கிச் சேவையில், கடன் கொடுப்பதில் பின்தங்கியிருக்கிறது என்றால், அதைக் குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், அது கூட்டுறவுத் துறையின் மூலமாக நிவர்த்தி செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம் மட்டும் நினைத்தாலும் முடியாது, நபார்டு வங்கியின் அனுமதி பெற்றாக வேண்டும் என்ற சூழ்நிலை இருக்கிறது. நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் அல்ல; தமிழகத்தில் 9 மாவட்டங்களில் அதே நிலைதான் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இதை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மட்டுமல்ல; எல்லா உறுப்பினர்களுக்கும்தான் பதிலாக விரிவாகச் சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்து, நன்றி கூறி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 187, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.